மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி நகரப் பஞ்சாயத்து 8-வது வார்டிலுள்ள ஞானசம்பந்தர் தெருவில் 6 என்ற கதவு இலக்கம் இடப்பட்ட வீட்டில் ஞானசம்பந்தர் பிறந்ததாக விசாரணையில் தெரிய வருகிறது. இந்த வீடு கல் கட்டு கோப்பு ஓட்டுவில்லை வீடு. சுமார் 3 வருஷத்திற்கு முன் திருஞான சம்பந்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கும்பகோணம் தாலுக்கா, பகவலி புறத்தில் உள்ள திருமதி லட்சுமி அம்மாள் என்பவரிடமிருந்து ரூ. 10,000-க்கு மேலையூர் தாசில் பண்ணை திருமதி கௌரி அம்மாள் என்பவரால் வாங்கப்பட்டு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் மடத்திற்கு இனம் சாசனமாகக் கொடுக்கப் பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது. மேற்படி வீடு அம்மடத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இந்த வீட்டில் திருஞானசம்பந்தர் படமும் ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் படமும் வைத்து ஆராதனை செய்யப்படுகிறது. இந்த வீட்டைச் சீர்படுத்தி தேவாரப் பயிற்சி நிலையமாக ஏற்படுத்த மேற்படி மடத்தினால் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

New Building for the Government High School for Girls, Ambur

* 181. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a new building for the Government High School for girls, Ambur; and

(*b*) if so, the present stage of the proposal?

ஆம்பூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆம்பூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பள்ளிக்கு ரூ. 25,000 மதிப்பீட்டில் துணைக்கட்டிடம் கட்ட அரசு ஒப்புதலளித்துள்ளது.